நஷனல் டிவலப்மென்ட் பாங்க் பிஎல்சீ

முக்கிய விடயங்கள் குறித்த ஆவணம்

உற்பத்திப் பொருள் வாழ்க்கை வட்ட முகாமைத்துவம்

- குறுஞ்செய்திச் சேவை(SMS) மூலமான விழிப்பூட்டல்கள் முறைமை

Classification: Public

முக்கிய விடயங்கள் குறித்த ஆவணம் – SMS மூலமான விழிப்பூட்டல்கள்

விளைபொருள் / சேவை	எவையேனும் ஊக்கத் தொகைகள் மற்றும் மேம்பாடுகள் உட்பட நிதிசார் மற்றும் வேறு நன்மைகள்	கட்டணங்கள்/ விதிப்பனவுகள், தரகுப்பணம்,வட்டி,	விளைபொருள் / சேவையைப் பெறுவதற்கு பின்பற்றப்பட வேண்டிய நடவடிக்கைமுறை, முக்கிய ஆபத்துக்கள்	பிரதான நியதிகள் மற்றும் நிபந்தனைகள்
SMS மூலமான விழிப்பூட்டல்கள் சேவை	• தனிநபர் மற்றும் தனிநபர் அல்லாத வாடிக்கையாளர்களுக்கு வாடிக்கையாளரின் விருப்பத்தின்படி எல்லா அல்லது தெரிவுசெய்யப்பட்ட கணக்குகளுக்கான நிகழ் நேர கொடுக்கல் வாங்கல் விழிப்பூட்டல்கள் வழங்கப்படுகின்றன. • வாடிக்கையாளர் தனது கணக்குகளினூடாகச் செய்யப்பட்ட எல்லாக் கொடுக்கல் வாங்கல்களினதும் பதிவேடொன்றை இயைபான விபரங்களுடன் கொண்டிருப்பார். • கொடுக்கல் வாங்கல்களுக்குரிய குறுஞ்செய்தி (SMS Alert) பெறப்படும் வரம்பெல்லையை வாடிக்கையாளர் விருப்பத்திற்கமைய நிர்ணயிக்க முடியும். • நினைவூட்டல் விழிப்பூட்டல்களுக்கு “ தொந்தரவு செய்ய வேண்டாம்” என்ற நேரங்களை வாடிக்கையாளர்கள் அமைத்துக் கொள்ள முடியும்.	NDB வங்கி நிறுவனத்தின் இணையத்தளத்தில் ‘பதிவிறக்கங்கள்’ என்ற பிரிவில் பதிவேற்றம் செய்யப்பட்ட ‘கட்டண’ தாளைப் பார்வையிடவும்.	• ஏற்கனவே கணக்கு வைத்திருப்பவர்கள் அழைப்பு மையத்தைத் தொடர்புகொள்வதன் மூலம் அல்லது கிளைக்குச் சென்று **“தனிநபர் அல்லது நிறுவன வாடிக்கையாளர்களுக்கான SMS மூலமான விழிப்பூட்டல்கள் சேவைப் பதிவுப் படிவத்தை”** சமர்ப்பிப்பதன் மூலம் பதிவுசெய்துகொள்ள முடியும். • புதிய கணக்கொன்றைத் திறக்கும் நேரத்தில், **“கணக்குப் பொறுப்பாணை”** ஊடாக SMS விழிப்பூட்டல்களுக்கு வாடிக்கையாளர்கள் பதிவுசெய்துகொள்ள முடியும். • டெபிட் அட்டைகளுக்கு விண்ணப்பிக்கும் நேரத்தில், **“டெபிட் அல்லது கடன் அட்டை விண்ணப்பப் படிவத்தின்”** மூலம் SMS விழிப்பூட்டல்களுக்கு வாடிக்கையாளர்கள் பதிவுசெய்துகொள்ள முடியும். **முக்கிய ஆபத்துக்கள்** • சாதனம் அல்லது SIM அட்டை காணாமல் போனால் அல்லது திருடப்பட்டால், PIN குறியீடுகள், SMS மூலமான விழிப்பூட்டல்கள் போன்ற வாடிக்கையாளரின் வங்கித் தகவல்களைப் பாதிக்கலாம் என்பதுடன் வாடிக்கையாளரை மோசடி ஆபத்துக்களுக்கு இலக்காக்கலாம். • SIM அட்டை தவறான கைகளுக்குச் செல்வதானது, வாடிக்கையாளரைப் போல் ஆள்மாறாட்டஞ் செய்யவும் தொடர்புகள்,செய்திகள், மற்றும் வேறு கணக்குகள் போன்ற அவரது தனிப்பட்ட தரவுகளை அணுகவும் இயலச் செய்யலாம்.	• வாடிக்கையாளர் இச் சேவைக்குக் குறிக்கப்பட்ட தொலைபேசியொன்றை மட்டுமே பயன்படுத்துதல் வேண்டும்; அதன் இலக்கம் வங்கிக்கு அறிவிக்கப்பட்டிருத்தல் வேண்டும். • வாடிக்கையாளர் SIM அட்டை மற்றும் கையடக்கத் தொலைபேசியை எல்லா நேரங்களிலும் தனது உடைமையில் வைத்திருத்தல் வேண்டும். • வாடிக்கையாளர் இச் சேவையை அணுகுவதில் வங்கியின் விதிகளை பின்பற்றுதல் வேண்டும் என்பதுடன் வாடிக்கையாளர் அவற்றுக்கு இணங்கத் தவறுகின்ற விடயத்தில் அவற்றின் விளைவுகளுக்கான பொறுப்பை ஏற்றுக்கொள்ளுதலும் வேண்டும். • வாடிக்கையாளர் தனது கணக்குகளின் மீது பயனுறுத்தப்படும் எல்லாக் கொடுக்கல்வாங்கல்களுக்கும் முற்றிலும் பொறுப்பாதல் வேண்டும். • வங்கியானது எவரேனும் மூன்றாம் நபரினால் அனுப்பப்பட்ட அதிகாரமளிக்கப்படாத செய்திகளுக்கு எந்தவிதப் பொறுப்பையும் ஏற்றுக்கொள்ளுதல் ஆகாது. • வாடிக்கையாளர் +94 112 448888 என்ற இலக்கத்தினூடாக NDB அழைப்பு மையத்தைத் தொடர்புகொண்டு உடனடி நடவடிக்கை எடுப்பதற்காக அதிகாரமளிக்கப்படாத கொடுக்கல் வாங்கல்கள் பற்றி வங்கிக்கு உடனடியாக அறிவித்தல் வேண்டும்.

			• வாடிக்கையாளர் தனது தொடர்புத் தகவலில் எவையேனும் மாற்றங்களை வங்கிக்கு உடனடியாக அறிவிக்காவிடின், கொடுக்கல் வாங்கல் பற்றிய அறிவிப்புக்கள், மோசடி தடுப்புச் செய்திகள் அல்லது ஒரு முறை மாத்திரமான கடவுச் சொற்கள் போன்ற SMS மூலமான விழிப்பூட்டல்களை வங்கியிலிருந்து பெறமுடியாமைக்கு இட்டுச் செல்லும். • SMS மூலமான விழிப்பூட்டல்கள் அதிகாரமளிக்கப்படாத அணுகுகைக்கு இலக்காக்கப்படுதல் திருட்டு அல்லது மோசடிக்கு இட்டுச் செல்லலாம்.	• சேவை வழங்குகைகளைத் தீர்மானிப்பதிலும் நியதி நிபந்தனைகளை மாற்றுவதிலும் வங்கி முழு உரிமையைக் கொண்டுள்ளது. • SMS மூலமான விழிப்பூட்டல்கள் சேவை வாடிக்கையாளரினாலான கோரிக்கையின் மேல் அல்லது NDB அழைப்பு மையத்தைத் தொடர்புகொள்வதன் மூலம் எந் நேரத்திலும் முடிவுறுத்தப்படலாம். • வெளியகக் காரணங்களிலான பரிவர்த்தனைத் தோல்விக்கு வங்கி பொறுப்பாதலாகாது. • இச் சேவையின் கிடைக்கக் கூடிய தன்மை செல்லிட வலையமைப்பு எல்லைக்குள் இருத்தல் வேண்டும். • வங்கியானது, செல்லுபடியற்ற தரவு, கணக்கை மூடிவிடுதல், தொலைத்தொடர்புச் சேவை வழங்குனர்களினாலான தொழில்நுட்பக் கோளாறுகள், நியதிகளின் மீறுகைகள் அல்லது வாடிக்கையாளரின் இயலாமை போன்ற காரணங்களுக்காக அறிவித்தலின்றி சேவைகளை இடைநிறுத்த முடியும் அல்லது முடிவுறுத்த முடியும். வங்கியானது அத்தகைய நடவடிக்கைகளுக்கு பொறுப்பாதல் ஆகாது. • வங்கியின் கட்டண அட்டவணையின் படி விதிப்பனவுகள் ஏற்புடையனவாதல் வேண்டும். • கட்டணங்கள் மற்றும் விதிப்பனவுகளை அறவிடமுடியாமைக்காக சேவையை செயலிழக்கச் செய்வதற்கான உரிமையை வங்கி கொண்டுள்ளது. • ரோமிங் பிரச்சினைகள் அல்லது வாடிக்கையாளர் இருக்கின்ற நாடு தொடர்பான சட்ட ஒழுங்குவிதிகள் காரணமாக விழிப்பூட்டல்களைப் பெறாமைக்கு வங்கி பொறுப்பாதல் ஆகாது. • வங்கியின் எல்லா நியதி நிபந்தனைகளினாலும்

				வாடிக்கையாளர் பிணிக்கப்படுதல் வேண்டும். • மேலதிக விபரங்களுக்கு NDB வங்கிக் கூட்டாண்மையின் இணையத்தளத்தில் 'பதிவிறக்கங்கள்' என்ற பிரிவில் 'SMS மூலமான விழிப்பூட்டல்கள்' என்பதன் கீழ் கிடைக்கக்கூடியதாகவுள்ள நியதி நிபந்தனைகளைப் பார்வையிடவும்.

உமது பின்னூட்டங்களை எம்முடன் பகிர்ந்து கொள்ளுங்கள்

எமது சேவைகளை எல்லா நேரங்களிலும் நீங்கள் திருப்திப்படும் வகையில் வழங்குவதற்கு நாம் கடமைப்பட்டுள்ளோம்.
உமது எதிர்பார்ப்புக்களை நாம் எவ்வளவு சிறப்பாக பூர்த்தி செய்கின்றோம் என்பதை அறியவும் அவசியமாகின்றவிடத்து சீராக்கல்களைச் செய்வதற்கும் உமது பின்னூட்டம் எமக்கு உதவிபுரியும்.

உமது பின்னூட்டங்களை எவ்வாறு பகிர்ந்து கொள்வது:

உமது வங்கிக் கிளை முகாமையாளரை(வங்கிக் கிளை தொடர்பு விபரங்கள்) அல்லது உமது தொடர்பு முகாமையாளரை நீங்கள் தொடர்புகொள்ளலாம்.

+94 (0) 11 2448888 என்ற இலக்கத்தினூடாக 24 மணி நேர அழைப்பு மையத்தைத் தொடர்புகொள்ளவும்.

எமது மின்னஞ்சல் முகவரி: contact@ndbbank.com

முகாமையாளர், வாடிக்கையாளர் தொடர்பு முகாமை, நஷனல் டிவலப்மெண்ட் பாங்க் பிஎல்சீ, இல.40, நவம் மாவத்தை, கொழும்பு 02 என்ற முகவரிக்கு எழுதவும்.

நாம் எவ்வாறு பதிலளிப்போம்:

முறைப்பாடொன்றைப் பெறுவதன் மேல், வங்கியின் முறைப்பாட்டைக் கண்காணிக்கும் முறைமையில் பதிவுசெய்து அது பற்றிய விடயத்தை உடனடியாகத் தீர்ப்பதற்கு முயற்சி செய்வோம். எம்மால் அவ்வாறு செய்ய இயலாமலிருக்கின்ற பட்சத்தில், மூன்று வேலை நாட்களினுள் தீர்வொன்றை நாம் உமக்கு வழங்குவோம். முறைப்பாட்டின் தன்மை காரணமாக, இக்காலப் பிரிவினுள் எம்மால் தீர்க்க முடியாவிடின், உத்தேச பதிலளிப்பு நேரமொன்றை நாம் உமக்குத் தெரிவிப்போம்.

நீங்கள் முன்மொழிந்த குற்றச்சாட்டு தொடர்பாக நாங்கள் அளித்த பதில் தொடர்பில் நீங்கள் முழுமையாக திருப்தியடையவில்லை என்றால்,
நீங்கள் இலங்கை நிதி ஒம்பியூட்ஸ்மன் அலுவலகத்தை அல்லது இலங்கை மத்திய வங்கியின் நிதி நுகர்வோர் உறவுகள் திணைக்களத்துடன் தொடர்பு கொள்ளலாம்.

திருமதி சந்தியானி விஜேசிங்க
நிதி ஒம்புட்ஸ்மன்
முகவரி: இல 01, பெதஸ்டா பிளேஸ், மிலாகிரிய, கொழும்பு 05
நேரடி தொலைபேசி: +94 112595625 பொது தொலைபேசி /தொலைநகல்: +94 112595624
மின்னஞ்சல்: fosril@sltnet.lk வலைத்தளம்: financialombudsman.lk

இலங்கை மத்திய வங்கியின் நிதி நுகர்வோர் உறவுகள் திணைக்களம் (FCRD)
முகவரி: நிதி நுகர்வோர் உறவுகள் திணைக்களம்,
இல. 30, ஜாதிபதி மாவத்தை, கொழும்பு 01.
விசாரணைகளுக்கான துரித இலக்கம்: 1935 தொலைபேசி: +94 112477966
தொலைநகல்: +94 112477444 மின்னஞ்சல்: fcrd@cbsl.lk

Classification: Public